**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி**

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண் | **SC 197 of 2019** | அரசு தரப்பு | **அ.சா.1** |
| பெயர் | சக்திவேல் | எதிரி தரப்பு | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | குப்புசாமி | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solmnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 11th day of March 2024.**

**முதல் விசாரணை :**

நான் த.நா.அ.போ. கழகத்தில் கிருஷ்ணகிரி புறநகர் பணிமனையில் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.06.2001 எஸ்.எம்.பி.எஸ். தனியார் பேருந்தில் ( பதிவு எண். T.C.D. 1771 ) நடத்துநராக இருந்த போது மாலை 5.30 மணிக்கு செங்கத்தில் இருந்து புறப்பட்டு கிருஷ்ணகிரி வந்து கொண்டிருந்த போது இரவு சுமார் 8.30 மணியளவில் மேட்டுசூளக்கரையில் சுமார் 20 பயணிகளை இறக்கி விட்டுவிட்டு அங்கிருந்து கிளம்பி சுமார் 1 பர்லாங் தூரம் பேருந்து சென்ற போது சுமார் 25 பேர் சாலையின் இருபுறம் இருந்து வந்து பேருந்தை வழி மறித்து, பேருந்தின் முகப்பு மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளை உடைத்தார்கள். மேலும் பெட்ரோல் பாட்டிலை கொளுத்தி பேருந்தின் மீது தூக்கி போட்டதில் தீ பிடித்தது. நான் அருகில் இருந்த வீட்டிற்கு சென்று உடனடியாக போன் மூலம் கல்லாவி காவல் நிலையத்திற்கும், பேருந்தின் உரிமையாளருக்கும்

தகவல் சொன்னேன். பேருந்து முழுவதும் எரிந்துவிட்டது. தீயணைப்பு துறையினர் வந்து அணைத்தார்கள். அந்த பேருந்தின் மதிப்பு சுமார் 3 இலட்சம் இருக்கும். பேருந்தின் உரிமையாளர் வந்தார். பின்னர் ஓட்டுநர் துரை, செக்கிங் வெங்கடேஷ், கிளினர் பாரதி மற்றும் நான் கல்லாவி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் அன்று கைப்பட எழுதிக் கொடுத்த புகாரின் நகல். அதில் என்ன எழுதப்பட்டது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. புகாரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்து கொள்ளப்படுகிறது. இது சம்மந்தமாக கல்லாவிபோலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>பிறழ்சாட்சி:</u>**

(இந்நிலையில் இந்த சாட்சியை இந்திய சாட்சிய சட்ட பிரிவு 154-ன் கீழ் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதும்படி வேண்டினார். சாட்சி அளித்துள்ள மேல் குறிப்பிட்டுள்ள சாட்சியத்தை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றம் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பு வழக்குரைஞர் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அவ்வாறே அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 26.06.2001 அன்று கல்லாவி போலீசார் விசாரித்த போது நான் 25.06.2001 அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு செங்கத்திலிருந்து புறப்பட்டு பதிவு எண். T.C.D. 1771 கொண்ட எஸ்.எம்.பி.எஸ். தனியார் பேருந்தில் நடத்துநராக கிருஷ்ணகிரி நோக்கி வந்து கொண்டிருந்த போது குறிப்பாக

இரவு 8.15 மணியளவில் மேட்டுசூளக்கரையில் பயணிகளை இறக்கிவிட்டுவிட்டு தொடர்ந்து சுமார் 1 பர்லாங் வந்து கொண்டிருந்த பொழுது ரோட்டின் இரு புறங்களில் இருந்த புதர்களில் இருந்து திடீரென சுமார் 25 பேர் பஸ்ஸின் இருபுறம் இருந்தும், கையில் கற்களை வைத்து கொண்டு, ஒரு சிலர் கையில் பெட்ரோல் நிரப்பிய பாட்டிலை வைத்துக்கொண்டு ஓடி வந்தவர்கள் பஸ்ஸை வழிமறித்து ஒரே கூச்சலாக பஸ்ஸை நிறுத்துடா என்று கத்தியதாகவும், பஸ் வெளிச்சத்தில் முன்புறம் பேனட்டில் டிரைவர் அருகே உட்கார்ந்திருந்த நான் அவர்களை அடையாளம் கண்டு கொண்டு பின்னர் விசாரித்த போது அவர்கள் மேட்டுசூளக்கரை காலனியை சேர்ந்த விடுதலை சிறுத்தை இயக்கத்தை சேர்ந்த முனுசாமி, அழகிரி, ரவி, ஆறுமுகம், முருகன், செந்தில், குமார், கிருஷ்ணமூர்த்தி, செந்தில் மற்றும் சுமார் 15 பேர் என்றும், விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் வாழ்க, அவரை உடனே விடுதலை செய் என்று கூச்சலிட்டவாறு எதிரிகள் கையில் வைத்திருந்த கற்களை கண்ணாடி மீதும், உள்ளேயும் அடித்தார்கள் என்றும், கண்ணாடி உடைந்ததில் பஸ்ஸில் பயணம் செய்த சிலருக்கு அடி படவே, எல்லோரும் இறங்கி ஓடினார்கள் என்றும், எதிரிகளில் 2 பேர் பெட்ரோல் நிரம்பிய பாட்டில்களை வீசி எறிந்து தீ வைத்தார்கள் என்றும், சிலர் டீசல் டேங்கை திறந்து விட்டு பஸ் டயர்களுக்கு தீ வைத்தார்கள் என்றும், பயணிகள் அனைவரும் அலறியடித்து கீழே இறங்கி தப்பியோடிவிட்டார்கள் என்றும், டிரைவரும் பயந்து கொண்டு எங்கோ ஓடி விட்டார் என்றும் சொல்லிவிட்டு

தற்சமயம் புகாரில் யார் மீது குறிப்பாக குற்றம் சாட்டியிருந்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. சாட்சி குறிப்பாக வி.சி.க தலைவர் திருமாவளவனை கைது செய்திருந்த போது தான் அந்த சம்பவம் நடந்ததாக சொன்னார். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது தான் எதிரிகளின் பெயர், விவரம் குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்தார். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது ஆஜர் எதிரி சம்பவ சமயத்தில் ஈடுபட்டிருந்த எதிரிகளில் ஒருவரா என்பது சரியாக தெரியவில்லை என்றார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal Sessions Judge,
Krishnagiri.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி**

| அமர்வு வழக்கு எண் | SC 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா.2 |
|---|---|---|---|
| பெயர் | துரை | எதிரி தரப்பு | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | முருகன் | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solmnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 11th day of March 2024.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஓசூரில் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் எஸ்.எம்.பி.எஸ். தனியார் பேருந்தில் (பதிவு எண். T.C.D. 1771) ஓட்டுநராக இருந்தேன். கிருஷ்ணகிரி - செங்கம் வழித்தடத்தில் பேருந்தை கிருஷ்ணகிரியில் இருந்து செங்கம் சென்று 25.06.2001 மாலை 5.00 மணியளவில் செங்கத்திலிருந்து புறப்பட்டு திரும்பி கிருஷ்ணகிரி நோக்கி ஓட்டி வந்து கொண்டிருந்த போது ஊத்தங்கரையில் மாலை 6.30 மணியளவிலும், கல்லாவியில் மாலை 6.45 மணியளவில் பயணிகளை இறக்கி விட்டு விட்டு வந்து கொண்டிருந்த போது சுமார் 8.15 மணியளவில் மேட்டுசூளக்கரை தாண்டி வந்து கொண்டிருந்த போது திருமாவளவனை கைது செய்திருந்ததால் அவரின் கட்சியை சேர்ந்தவர்கள் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று கோஷம் போட்டவாறு சுமார் 25 பஸ்ஸின் இருபுறமும் இருந்து வந்து கையளவு கல்லை வீசி எறிந்தார்கள். அதில் கண்ணாடி உடைந்தது. பாட்டிலில்களில் பெட்ரோல் நிரப்பி

கொண்டு வந்திருந்ததை தீ வைத்து பேருந்தின் மீது வீசி எறிந்ததில் தீ பற்றி எரிந்தது. தீ பற்றி எரிந்து புகை மூட்டமாக இருந்ததால் எதிரிகள் யாரையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை, ஆஜர் எதிரி இருந்தாரா என்று சரியாக சொல்லத் தெரியவில்லை. உடனே நாங்கள் எங்கள் பேருந்தின் உரிமையாளருக்கும், கல்லாவி காவல் நிலையத்திற்கும், தீயணைப்பு துறையினருக்கும் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வீட்டிலிருந்த லேண்ட் லைன் போன் மூலம் தகவல் தெரிவித்தோம். எங்கள் உரிமையாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்தார்கள். போலீசாரும் வந்தார்கள். பின்னர் நாங்கள் கல்லாவி காவல் நிலையம் சென்று நடத்துநர் சக்திவேல் அ.சா.1 புகார் கொடுத்தார். அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து போலீசார் விசாரித்த போது இங்கு சொன்னது போன்றே சொல்லியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படுவது போன்ற கற்களை தான் எதிரிகள் அன்று பேருந்தின் மீது வீசி எறிந்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA
Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal Sessions Judge,
Krishnagiri.